
# கேள்விபதிலும்! அனுபவ ஞானமும்!! இதழ் ①



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா




# ஜோதிடபதியும்! அனுபவ ஞானமும்!! இதழ் 1

# பொருளடக்கம்

1. தோற்றாச்சுமை---------------------------------------------A
௨. ஒன்றினுள் ஒன்று-------------------------------------------8
௩. கேள்வி பதில்-----------------------------------------------௨

எல்லாம் நீ!



(ஸத்திய வாக்கு) (1)

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை பெறும்!

"ஸத் குரு திருவடி துணை"!

"நம்பினோர் கெடுவதில்லை"!

"தெய்வம் மனுஷ்யாணாம்"!

"யத் பாவம் தத் பவதி"!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம்"; ஓம்!

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம்,"

"அகமே எல்லாம்"!

"ஜெகம், பரமம், ஜீவர்களும்,"

அடங்கு. "சிரஜாம் இலிப்"! அடங்கு.

அடக்காதே. அடக்காதே.



வாக்கு ௨

ஸத்சிஷ்யனின் நம்பிக்கை ஸத்குருவின் மீதும் ஸத்குருவின் நம்பிக்கை பரமாத்மாவிடம் பரவியும் ஆகும். ஸத்குருவே பரமாத்மாவின் ஸ்வரூபியாகவும் ஆகிவிடுவதால் அந்த ஞானிக்கு அன்னியம் எதுவும் இல்லை என்பதில் ஸத்சிஷ்யனுக்கு அடங்கிவிடுகிறான். ஆகவே ஸத்குருவை நம்புகிறவன் பரமாகவே ஆகிவிடுகிறான். அவன் முயற்சி முயற்சி எல்லாம் அவனுடைய ஸத்குருவே.

பாமா:- எளிமையினும் எளிமையானவரே! நம் அனைத்து அன்பர்களிடத்தும், இக் கேள்வி உள்ளது. இது அடி ஆழ சந்தேகம் ஆகும். வெளிப்படையாக, இதைக் கேட்க அஞ்சுகின்றனர். அதைக் கேட்கலாமா?

வைத்தியம்:- என்ன குழந்தே பாமா? பயம் ஏன்? பயமே பலிதம் என உணர்ந்தும், பயம் எதற்கு? சந்தேகம் இருவகைப்படும். அநுபவாத்மகமாக இருந்தால், [illegible] பய சந்தேகம் ஆகும். அது தெய்வீகமாக இருந்தால், தெளிநிலை சந்தேகம் ஆகும். முந்தையது புண்ணிய பாபமும் பிறவிப் பிணியும் இணைந்ததாகும். பிந்தையது ஸத்திய தர்ம [illegible], பிறவா நிலையாகிய ஜீவன் முக்திக்கு, வழிவகுத்து கொடுக்கும். உன் சந்தேகம், ஸாத்விகமானதாகவே உணர்கிறேன். கேள்.



அக்குழந்தையின் நிலையும்! அந்த ஏழை வைத்தியத்தின் நிலையும்! அங்கு எப்படி அமைந்தது என்றால்? (3)
நாமரூப, ஜக ஜீவத் தோற்றங்களில், நீ, என்னதான் பந்தப்பட்டிருந்தாலும்; எம் வார்த்தாலும், வாசகத்தாலும் வரும். தொடரும்.

பாமா:— அது எப்படி, அப்படி உறுதியாக, சொல்கிறீர்கள் பாமா? யாம் அஸத்தை கேட்க மாட்டோம் என்று, எப்படி நிர்ணயம் செய்கிறீர்கள்? எம்மீது, அத்தனை நம்பிக்கையா?

வைத்தியம்:— நீ எம் குழந்தை ஆயாற்றே! எம் குழந்தை! அஸத்தாகாது! அஸத்தாக முடியாது! அஸத்தாக இயலாது! உன்னை மாத்திரம் அல்ல பாமா! உன்னைப் போல், எம் ஸத்திய வாசகத்தையும்! வாக்கையும்! நம்பும் குழந்தைகள், அனைவரும் ஸத்துக்களே. அஸத் அல்ல!

பாமா:— இந்த உறுதி, உங்களுக்கு எப்படி வருகிறது பாமா?

வைத்தியம்:— எம் குழந்தைகள், அனைவர் மீதும் எமக்கு பரிபூரண நம்பிக்கை இருக்கிறது. அவர்களுக்காகவே யாம் வந்தோம். அவர்கள் இல்லையேல், யாம் இல்லை! அவர்களே யாம்! யாமே அவர்கள்! நாம் அனைவரும் அதுவே!
இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!




கருத்துக்களோ, படித்து
உணரும், குழந்தை (4)
எதுவும், அவசியம்
நம்பிக்கையுடனும்
வைராக்யமுடனும்தான்
இருக்கிறதென்று யாம்
சத்திய பிரமாணமாக
நம்புகிறோம் என வைத்தியம் நம்புகிறது. முடிந்தது.

பாமா:— அந்த அன்பின் குழந்தை பாமா! விக்கி விக்கி, அழுது விட்டது. அக் கண்ணீரை, அந்த வைத்தியம், தன் விரலால் துடைத்து எடுத்து, தன் அழகு வாயில் ஊட்டிக்கொண்டு சுவைத்தது. அந்நிலையில், அக் குழந்தையின் நிலையை, சொல்ல வாக்கும் இல்லை! வரவில்லை!! வரியும் இல்லை! பேனா எழுத மறுக்கிறது. இல்லை பொறுக்கவும்.
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

எம்பிரபுவின் கருணையால் ஓர் நிலைப்பட்டோம்.

ஹே பாபா! பாபா! யாம் எங்கே இருக்கிறோம்? என்ன செய்கிறோம்?? ஒன்றுமே புரியவில்லையே?

வைத்தியம்:— பொறு குழந்தே பொறு! நீ எங்கேயும் போகவில்லை. இந்த ஏழையின் முன்னே நான், அமர்ந்திருக்கிறாய். இதோ எம்மைப் பார்? உணர்ச்சி அற்றிருந்த அக் குழந்தையின் சிரசில் அபயகரம் வைத்து, தட்டி, சேதனா சக்தியை கொடுத்ததும் அக் குழந்தை அதன் கேள்வியை கேட்டது.



இறை / குருவின் மீது நீ கொண்ட பூர்ண நம்பிக்கையே உன் பலம் ஆகும். உனக்கு பயனும் ஆகும். உன் சந்தேகங்கள் கவலைகள் பயமே உன்னால் தெரியும் காட்சியாகும். ஸ்ரீ ஸத்குரு என்ன சொல்கிறார் என்றால் நீ அவரை முழுமையாக நம்புவதாக அவர் உன்னை நம்புகிறார். வினையால் சோர்வு, அயர்வு, தளர்ச்சி வேண்டாம்.

(5)

பாமர:- ஹே அன்பின் வடிவமான பாபா ஜீ!
நீங்கள் எங்களை நம்பும் அளவுக்கு! நாங்கள் உங்களையும்! உங்கள் வார்த்தையும்! முழுமையாக நம்பும் அளவுக்கு, கிருபை செய்ய வேணுமாய், உம்பாதம் பணிந்து வேண்டுகிறோம்!!!

ஹே பணிவின் சிகரமே! கனிவின் உருவமே! கருணையின் வடிவமே! ஹே பாபா ஜீ! எங்கள் கேள்வியாவது? ஸ்வய ஞானானுபவ பாடல்களில்?

பாடல் 15. மித்தை என்னும் சித்தமுமே என்றுமில்லை!
மிகப் பொய்யாம் ஜகமுதலும் ஒன்றுமில்லை!
மித்தை என்னும் வார்த்தையும் என்றும் இல்லை!
மிக மிகவும் மூடரென்றும் ஜனமே இல்லை!

என்ற நடையில் இதன் அடிப்படையாவது?
மூடன்! முட்டாள்! மூர்க்கன்! காமுகன்! வஞ்சகன் கஞ்சன்! மட்டி! மடையன்! பாமரன்! என்ற நடையால்;

# ஒன்றினுள் ஒன்று



உன் ஹிருதயத்தில் வரும்
சோதியையும்! வேத
நியமும்! உன்னை
அதிர வைக்கிறது! உன்
ஹிருதயை நீ நோக்கியே
தீர வேண்டும். அங்கு அவன்
நாமாவை முழு நம்பிக்கை
யோடு பக்தி பூர்வமாக அவசியம்
சிரமங்கள் குறைந்து குறைந்து மறையும். அவர்
மாயா அனுபவங்கள் பார்த்து புத்தி தெளிவும் உன்னை
பார்த்துக் கொள்ளும்.


(6)

தகாதவன்! தகுந்தவன்! என்ற பேதம்!
இல்லாத நிலையால், ஜீவன் முக்தி அடையலாமென்றும்.

பாடல் 34 ல்

நிறைவுரும் இந்த நிலையுள்ளோர் நீசரேனும்.

நிர்மலமாம், பரமாகி முக்தராவார்!
அறைவதிவோர்! அனுவேனும் ஐயமில்லை என்றும்.
அதாவது, பஞ்சமஹா பாப பாதகங்களாகிய,
(1) குருஹத்தி! (2) பிரம்ம ஹத்தி (3) ஸ்திரீ ஹத்தி!
(4) கோ ஹத்தி! (5) சிசுஹத்தி! ஆகிய பஞ்சமஹா பாப
ங்கள் செய்திருந்தும் நீசன் என்ற சண்டாளன்! ஆனாலும்,
அங்கும் தகாதவன் நகுந்தவன் என்ற பேதம்
இல்லாத நிலையில், ஜீவன் முக்தி அடையலாமென்றும்.




இறை ஒரு உணர்வு (7)

பரிபூரணம் நிறைவோடு இருந்தால், அப்பாவம் செயல், நடைபெறுவதை மாற்றி அமைக்கும். அல்லது தடுத்து நிறுத்தும் அல்லது அது பயன்தரும் முன்பே ஓர் புண்ணியத்தை செய்ய வைத்து அவசியம் அதை மாற்றும். காரணம் இல்லாம் அவன் பொறுமை இல்லாம் அவன் செயல் என்று சர்வாரம்பணம் ஆகும்.

எம் ஸ்ரீகண்ணன் தம் ஸ்ரீமத் பகவத் கீதையின், ஓர் வாசகம், எப்படி அமைகிறது என்றால்?

ஹே பார்த்தா! ஒருவன் பஞ்ச பாப பாதகங்கள் பல பல செய்திருந்தாலும், சந்தேக களங்க நீக்க பயம் வேண்டாம் என்றும், அங்கு அத்வைத யாம் ஞானம் என்னும், ஓர் ஓடம் தருகிறேன் நீ கரையேறி விடலாம் அதாவது ஜீவன் முக்தி அடைந்து விடலாமென்று கூறுகிறான்.

ஹே அறிவான பாவபாலே! இப்படியாக, இந்த மூன்று நிலைகளையும் கவனித்து உணரும் போது, ஜீவன் முக்தி வெகு வெகு வெகு, எளிதென்றும், பஞ்சமா பாப பாதகச் செயல்கள் அப்படியொன்றும் கடினமில்லை செய்தாலும் தோஷம் இல்லை என்றும், பாபம் செய்ய தூண்டுவதாகவும் தோன்றுகிறதே!!!



அஹங்கார மமகாரங்களின் ரூபமாக நிகழும் அனைத்து கர்மாக்களும் புண்ணிய பாப சம்பந்தம் கொண்டதாகும். அவை இத் ஜீவனின் கவனக் குறைவால் நிகழ்வதாகும். அக் கர்மாவுக்கு இவனே பொறுப்பு ஆகிறான். அவை பஞ்சமஹா பாப பாதகச் செயல்களாகவும் இருக்கும்.

இதை வைத்து எங்கள் கேள்விகளாவது?

(1) பஞ்சமா பாப பாதகங்கள் (A) எப்படி நிகழ்கிறது? (B) ஏன் நிகழ்கிறது? (C) அது வழு இழைக்க காரணம் ஏன்?

(2) மற்றும் எந்த சக்திகளாலும்! பக்திகளாலும்! அபூர்வ சித்திகளாலும்! மாய மந்திரங்களாலும்! விலக்க முடியாத ஒன்றை இந்த அத்வைதானந்த, ஆத்ம ஞானம் ஒன்றுமட்டுமே கனவின் காட்சி எப்படி நிஷ்பலமோ? அப்படி ஆக்க காரணம் ஏன்?

இதன் விளக்கம், வேண்டும் பாபா என கேட்டது???

இனி பதில்!!!

வைத்தியம்:— முதலில் சில குறிப்புகளை தருகிறோம். பின் உன் கேள்விக்கு, விடையளிக்கிறோம். முன்பு சொன்ன, சில வைத்திய வாசகங்களை, நீ காண்க.

நீ கொன்றவனோ! அல்லது கொன்றவைகளோ!
உன்னை கொல்கின்றான்! அல்லது கொல்கின்றன!
நீ எவனை தின்றாயோ அல்லது எவைகளை தின்றாயோ
அவனே உன்னை தின்கிறான் அல்லது அவைகள் உன்னை தின்கின்றன



(9)

சர்வார்ப்பணமாக செய்யும் அனைத்து இர்மாக்களும் ஸத்திய தர்மத்தோடு கூடியதாகும். இச்ஸத்திய தர்மத்தோடு நிகழும் கர்மாக்கள் எவ்வாறாயும் மாற்றவும் புண்ணிய கர்மாவை கொடுத்து நிற்குமாறவும் அனுபவ முடிவில் அந்த இல்லாமல் செய்யவும் முடியும் கிருஷ்ண நாமங்கள் அனுபவம்.

நீ எவனை பாதுகாத்தாயோ அவனே உன்னை பாதுகாக்கிறான்.

நீ எவைகளை பாதுகாத்தாயோ அவைகள் உன்னை பாதுகாக்கின்றன.

நீ எவனை துன்புறுத்தினையோ அவனே உன்னை துன்புறுத்துகிறான்.

நீ எவைகளை துன்புறுத்தினையோ அவைகள் உன்னை துன்புறுத்துகின்றன.

நீ எவனை வாட வைத்தாயோ அவனே உன்னை வாட வைக்கிறான்

நீ எவைகளை வாட வைத்தாயோ அவைகள் உன்னை வாட வைக்கின்றன.

மேலே கூறிய, ஸத்திய வாசகங்களை, கருத்தான்றி உணர்ந்தால், கீழே தரும் உண்மைகள் விளங்கும்.

இவ்வுலகம்


ஓர் நாடக மேடை. அந்த பெரிய நாடகமேடையில், உயிரினங்கள் (மனித இனம் உட்பட) அனைத்தும் அனைவரும் அவரவர், புண்ணிய பாப வேஷங்களை மாறுபடாமல் / வேறுபடாமல் / நடிக்க வந்தவர்களே. அனைவரும் பேதம் இல்லாமல், ஒழுங்காக அவரவர் போட்ட வேஷத்தை திட்டமிட்டபடி நடித்துக் கொண்டிருக்கிறோம். நடிக்க வேண்டும் நடித்தே ஆகவேண்டும்.



இந்த பஞ்சமா
பாப பாதக
செயல்களுக்கு நம்
போக்கே காரணமாக
அமைகிறது. எப்படி
என்றால்? பழிச் சொல்லே
பாபச் செயலாக மாறுகிறது
நம் வாக்கு உடையவன் கூறாது,
காலம் நேரம் பக்குவபக் குவம் சூழ்நிலை ஆகியவை
களை அனுசரித்து பலன் தரும். தொடரும்.

இந்த நாடக நடிப்பில்

இதில் கூறிய, பாப பாதக நிகழ்ச்சியாக இருந்தால்,
பழிக்குப் பழிவாங்கும் நியாயம்.
மற்றும் அனைத்து நிகழ்ச்சிகளும் பற்று வரவு
தீர்க்கப் படுகின்றன என்றும், பாப நஷ்டங்கள்
பகிர்ந்திக்கப்படுகின்றன என்றும், உணர வேண்டும்.
இதனாற்றான்?
கொடுத்ததை வாங்க வேண்டும், வாங்கியதை கொடுக்க
வேண்டும். வினை விதைத்தவன் வினை அறுப்பான்.
தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்றும்;
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்றும்
அவரவர் செய்த வினையே, அவரவர் முன் நிற்கும்.
என்றும், செய்த வினை, செய்தவருக்கேயன்றி
ஒருவர் செய்த வினை, அவருக்கேயல்லாது, மற்றவர்க்கு
அவ்வினை சாராது என்றும், ஸ்ரீமகான்கள் சொல்லி
வைத்தார்கள்.



அப்படி தரும் பலனை (11)
பஞ்ச பாபமாக இருப்பதால் அதுவே பஞ்ச மஹா பாப காரியமாக மாறும் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற முதியோர் வாக்கு இங்கு பொருந்தும். அந்தகுழந்தைக்கு மனம் வருந்தி முறையிட்டால் அவசியம் விடிவுகாலம் உண்டு.
முடிந்தது.

இனி உன் கேள்வியின் பதிலை காண்க.

(1) பஞ்சமஹா பாப பாதகங்கள்

(A) எப்படி நிகழ்கிறது?

பதில்:— இது முன் & பின் கணக்கு சம்பந்தம் கொண்டதாகும். இம் முன்பின், கணக்கானது நம்மை இன்னார் என உணராததாகும். நாம் ஸ்ரீ பகவானின் குழந்தையாக இருந்தும்; பின் அனுபவ உணரும் நிலையில், நாமே ஸ்ரீ பகவானாக இருந்தும்; பின் நம் ஸ்வய அனுபவ நிலையில், நாமே காவாத்த பரசொரூபமாக இருந்தும்; மனதின் பிடியால் அகப்பட்டு, நான் ஓர் மனிதன்! ஆண்! பெண்! குடும்பி என்று, சம்சாரி என்று, கண்கெட்ட நிலையில் தன்னை ஓர் பந்த ஜீவனாக பாவனை செய்து, அந்த ஜீவகர்த்தத்துவத்தினை நான்! என்னால்! எனது விடமுடியாமல் கர்மாவை பெருக்கிக் கொண்டு,



அபசாரம் செய்யுக்கு

பரிகாரம் செய்தால் அந்த கர்மா வலுப் பெறும். இறைவனிடம் முறையிட்டு அழுதால் அபசாரம் செய்தவர் கழுவி! கழுவி! கழுவி! தேய்ந்து, தேய்ந்து, தேய்ந்து பயன் அற்று நாசம் ஆகும். நம் கண்ணில் இருக்கும் மிஞ்சிய பலம், பலன் வேறு எங்கும் இல்லை.

என்ன செய்கிறோம்? என்ன செய்யவேண்டும்? எதை செய்ய மறந்தோம்? ஏன் இப்படி கண் கெட்ட மாடு போல் அலைகிறோம்? நாம் அனைவரும் ஸ்ரீ பகவானின் குழந்தையாயிருந்தும் மனதால், ஆட்டி வைக்கப்பட்ட தன்மையால், ஒருவரை ஒருவர், வேற்றுமையாக, பாராட்டிக் கொண்டு, போட்டி பொறாமையாலும்! பாடம் படிப்பு பட்டம் பதவி! கௌரவ வித்யாசத்தாலும் விரோதம் & குரோதம்! கொண்டு, ஒருவரை ஒருவர் பிடிக்காத தன்மையால், பஞ்சமஹா பாப பாதகங்கள் விளைவதை உணர வேண்டும்.

(B) பஞ்சமா பாப பாதகங்கள் ஏன் நிகழ்கிறது?

பதில்:— விட்ட குறை என்றும் தொட்ட குறை என்று, ஸ்ரீ மஹான்கள் சொல்வர். இதன் உட்கருத்து என்ன வென்றால்?




ஸ்ரீ பரமஹம்ஸ பகவான் ஓர் கதை சொல்வார். ஓர் அண்ணன் அவன் தம்பியிடம் புலி வேஷம் போட்டு பயமுறுத்துகிறான். தம்பி அதை அறியாமல் பயம் கொள்கிறான். அவருக்கு அவர் அண்ணன் மீது அளவு கடந்த பிரியம். ஆகவே அவர் அண்ணா! அண்ணா (கண்ணே கண்ணே) என அலறுகிறார். திறமையை அறிந்த அவர் அண்ணன் (தன்னையே நினைவில்) தொடரும். (13)

விட்ட குறை :- நாமரூப பொருள்களின் மீது, கொண்டுள்ள மோஹாவேச வார்த்தைகள் ஒரு ஜன்மாவில், விட்டுப் போனது மறு ஜன்மாவில், தொடரும் வாக்கையே / விட்ட குறை என்பார்கள்.

தொட்ட குறை :- நாமரூப, ஜகஜீவ, பொருள்களில் தொட்டு அனுபவமோ, உண்டு அனுபவமோ, ஆசை தீரும் நிலையில் (ஆசை தீராமல்) விடுபட்ட நிலையில் அது இந்த ஜன்மாவில், கிடைப்பது தொட்ட குறை என்பார்கள். இவ்விரண்டும், ஒரு ஜன்மா மாறி, மறு ஜன்மாவில், கிடைக்கும் போது, (கவி) தோஷ குணங்கள் உண்டாகும். அதனைப் பெறுவது கோபாவேசத்தால் நிகழ்வதாகும்.


(2) கேள்வி :- மற்றும் எந்த சக்தியாலும், பக்தியாலும், அபூர்வ ஸாத்தியராலும், மாயமந்திரங்களாலும், ஸ்வீகரிக்க முடியாத ஒன்றை / இந்த அத்வைதானந்த, ஆத்ம ஞானம் ஒன்று மட்டும், தனியின் காட்சி! எப்படி நிஷ்பலமோ




அப்படி ஆகக் காரணம் என்ன?

பதில்:— முக்கிய காரணமாவது? ஒர் பக்குவ ஆன்மாவானவன், சாதனை பலபல செய்தும்! ஓடியாடி அலைந்தும்! சம்சார சாகரத்தில்! கரையேறுவதற்கு, ஒரு துறைகாணாமல், ஏங்கும் நிலையில் பூர்வ தர்மத்தாலும் ஸ்ரீ மஹான்களின் ஆசியினாலும்! ஸ்ரீ பகவானின் பரிபூரண கிருபையாலும்! இவன் ஏக்க சித்தத்தையினாலும்! ஒர் ஸத்குரு திருவை பெறுகிறான். இவன் ஸர்வார்ப்பணத்தில் பக்தியை அனுபவித்தவனாகும். ஆகவே இவனுக்கு, ஸத்குருவான்! ஆரம்ப பாடமே, நாமரூப ஜகத ஜீவ சொரூபங்களும், அனைத்து பொருள்களும், பொய் என உணர்வு பெறுகிறான். அதாவது இயற்கையே ஈசனே அதன் காரியத்தை திட்டமிட்டு புண்ணிய பாவப்படி செய்கிறது என்றும், சொந்தம் கொண்டாடிய, மனதிற்கே, அதனைப் பந்தத்தை, உண்டாக்கிய மாயா வித்தை, நடைபெறும் ஒரு மாயா காரியமாகும், என உணர்ந்து





## நனவும், கனவும்

15

ஒன்றென உணர்வதே ஞானம் ஆகும். நனவுக்கு எவரொருவன் முக்கியத்துவம் கொடுக்கிறானோ? அவன் அஞ்ஞானியே. நனவு மறந்தும்! காலக் கிரமத்தில் மறந்தும்!

போக வாழ்க்கையாளன் அவன் அஞ்ஞானியே என ஸ்ரீமகான்கள் வாயிலாக அறிகிறோம்.


யாமோ (அஸங்கன்) (அஸலன்) (அசைமயன்) அதாவது (சொந்தபந்த தொடர்பில்லாதவன்) (அசை (ஆசை) அற்றவன்) (நாமரூபம் இல்லாதவன்) பற்றுவரவின்படி, லாப நஷ்டங்கள், பகிர்ந்தளித்து (உலகின் நிலையில்) ஓர் கூத்து, நடைபெறுகிறதென்று, எந்நிலையிலும், எனக்கிருப்பான் (சும்மாவே) (சுகமாகவே) (இருப்போம்).

(ஆத்ம விழிப்புணர்வு) என்பது, எப்படி அமையுமென்றால்?

(A) கனவில் தேளோ, சர்ப்பமோ, தீண்டிய நிலையில், (விழித்த ஒருவன்) (மெய்யுணர்வால்) வைத்தியனை, எப்படி, தேடிச் செல்லமாட்டானோ! அந்நிலையிலும்.

(B) தன் கனவில் ஒருவனுக்கு, ஒரு லட்சம் பணம் கொடுப்பதாக கண்டவன், (விழித்தவுடன்) (மெய்யுணர்வால்) பணம் கொடுத்ததாக, கண்டவனை, எப்படி தேட மாட்டானோ! அந்நிலையிலும்.

(C) கனவில் தான், இறந்த நிலையில், பாடைகட்டி தூக்கிச் செல்வதாக, கண்டவன், (விழித்தவுடன்) (மெய்யுணர்வால்) தனக்கு, பாடை கட்டும்படி, எப்படி சொல்லமாட்டானோ! அந்நிலையிலும்.



(16)

இரும்பு அடிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை? அதுபோல நாமரூப ஜகத் மனதின் விளையாட்டு உள்ள இடத்தில் ஆத்ம ஞானிக்கு என்ன வேலை????????? இருப்பது ஒன்றே! என்றும், நடப்பது நலமே! என்றும், கண் இருந்தும் குருடாய்! காது இருந்தும் செவிடாய்! வாய் இருந்தும் ஊமையாக இருப்பதே ஆனந்தம் ஆகும்.


ஜாக்ரதாவஸ்தை (விழிப்பு) நிலையில், எல்லாம் நாமரூப காட்சி நிலையில் பொய்யே என்றும், நாமரூபமற்ற நிலையில் எல்லாம் மண்ணே என்றும், மண்ணுக்கு அன்னியம் எதுவும் இல்லை என்றும், மண்ணாகிய பரமே! பரமாகிய யானே எல்லாம் என்றும் உணர்வு நிலையில்!

(A) லௌகீகம் என்பது, மாயா மனதிற்கும் நாமரூப மாயாவுலகிற்கும் நடைபெறும், ஓர் திட்டமிட்ட பொம்மலாட்டம்! என்று இருப்பான்.

(B) தெய்வீக நிலையில், ஜீவாத்ம பர சொரூபமே திரி கர்த்தாக்களாகி, மாயாவை வைத்து விளையாடிக் கொண்டு இருக்கிறது. அங்கு நமக்கென்ன வேலை என்று இருப்பான்.

(C) பரமார்த்திகத்தில், யாம் தெய்வீக ஈசனும் இல்லை, யாம் லௌகீக ஜீவனும் இல்லை. ஆனால் இல்வாழ மாந்தர் மனதில் இருப்புடையவர்களாக பாவனையால் மயங்கி! சொந்த பந்த பாசத்தினால் மயங்கி! புண்ணிய பாபங்களையும் பஞ்சமஹா பாபம் என்றும், பிதற்றித் திரிகின்றனர்.





மனகடல்
களங்கம்
கலக்கம்
சந்தேக பயதுக்கம்
முதலியவை நீங்கிவிட
முடியாதவர்கள் நாம
ரூப ஜகஜீவர்களை
விடமுடியாதவர்கள்
ஆகும். பின் எப்படி இவர்கள்
பஞ்சமஹா பாப பாதகங்களை யாம் செய்ய
வில்லை அது விதி! விதி! மனதின் விளையாட்டு என
விடமுடியும்????????????????????

(17)

ஆனால் பிரம்மம் ஸத்தியம்! ஜகத் மித்தை! என்று
நிலையாக இருப்பது ஒன்றே! நடப்பது நவமே!
நாமரூப உலகம் வந்ததும் இல்லை! அது இருந்ததும்
இல்லை! அது மாறியதும் இல்லை! அது மறைந்ததும் இல்லை!
வந்ததும்! இருந்ததும்!! மாறியதும்!!!
மறைந்ததும்!!!! நாமரூப தோற்றங்களே!
அந்த நாமரூப தோற்றங்கள், நம்முடையதும் அல்ல!
அவை நாமும் அல்ல! அந்த நாமரூப தோற்றங்கள்
பின்னி பிணைந்து, விளையாடுவது, மனதின் தோஷ குணங்கள் ஆகும்.
அத்தோஷ குணங்களை காட்டி, விதிதாதா சாரப்படி,
விளையாடுவது, விதி என்ற சக்தி ஆகும். இதை வாக்கிய
விளக்கமாக, சொல்வது என்றால் மனம்! விதி! விதி!
ஆகும். இம்மூன்றும், நாமரூப, ஜகத் நிமித்தமாக,
பேசப்படுவதாகும். ஆனால் உண்மை இல்லை. ஆனால்
இவைகளை புண்ணிய பாபமாகவும்! தோஷ
குணங்களால் விளையும், பஞ்சமஹா பாப பாதகங்களாக
பேசப்படுகிறது. ஆனால் உண்மையல்ல.

## கேள்வி பதில்



எல்லாம் நீயே! (18)
எல்லாம் உனதே!
எல்லாம் உன்னால்!
என ஸ்ரீ பகவானிடம்
விட்டவர்களுக்கு இவ்வித
நானாவித சந்தேக
மயக்கம் ஏது? அவர்
களுக்கு இங்கு இருப்பு ஏது?
இங்கு இயக்கம் ஏது?
அவர்களுடைய பொருள் ஏது? அப்படியானால்
பஞ்சமா பாப பாதக செயல்கள் எப்படி வந்தது?

உலகம் இல்லை என்பவர்களுக்கே இல்லை.
உலகம் உண்டு என்பவர்களுக்கு உண்டுதான்.
இந்த உண்மையின் திட உணர்வு அத்வைத
திட உணர்வுடன், அனுபவம் ஆன ஆத்ம ஞானி,
ஒருவனுக்கே, பொருந்தும். காரணம் இவன் ஒருவனே
மனம் அழிந்த மெய்ஞ்ஞானி அறிவானவனே.
மனம் இறவாதவர்க்கு இது பொருந்தாது.
மற்றும் அஞ்ஞ சாதகர்களும் கர்மா சம்பந்தம்
கொண்டதாகும்.
ஆத்மஞானம் ஒன்றே கர்மா சம்பந்தம் இல்லாததாகும்.
ஈஸ்வரனுக்கே நாமரூபமாய் இல்லை என்ற போது,
அவர்களால், உண்டானது எனச் சொல்லும் கற்பனை
நாமரூப ஜக ஜீவ தோற்றம் ஏது? மேலும் ஓர் நிலையில்,
மாயாவும், மோஹ மனமும் இல்லை என்ற போது, அம்மனதின்
கற்பனையான நாம ரூப ஜக ஜீவ தோற்றமேது?




பஞ்ச மஹா பாவ
பாதகச் செயல்
என அஞ்ச வேண்டாம்
(1) பற்று வரவின்படி (விதி)
பரிமாற்றம் நடைபெறும்.
(2) (இறை) (குரு) உணர்வால்
(மாற்றம்) உண்டாகலாம்.
(மாறவும் மறையவும்) செய்யலாம்.
(3) (வேறு வினையைக்காட்டி) (ஈடு)
கொடுத்து பயன் பெறுமாறு செய்யலாம் என்று
ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

(19)

பஞ்ச மா பாவ பாதகச் செயல்! ஆத்ம ஞானத்தால்,
வரு இழுக்குக்கு, காரணம் என்ன வென்றால்?
(மனம்) (இல்லாததே) (காரணம் ஆகும்.)

பஞ்சமா பாவ பாதகச் செயல் (உண்டாகு) (காரணம்)
என்ன வென்றால்?
(நான்,) (என்றல்,) (எனது,) என்ற அஹங்காரம்!
அதிகாரம், ஆதிக்கம், அவமானம், வெறியை, இந்த
(மனம் பற்றி) (ஆடாத ஆட்டமும்,) (தகாத பேச்சும்,)
(வேண்டாத செய்கையும்,) (தகாத சேர்க்கையும்)
(போட்டி பொறாமை,) (பட்டம், பதவி, பணம்,) இவைகளின்
(வெறி ஆட்டமும்) தான் காரணம்.

ஆத்மானந்த குழந்தைகளே! (நடந்தவைகளை
எண்ணி) வருந்த வேண்டாம். (எல்லாம் நீயே) என்று
(சர்வ அர்ப்பணத்தில்) முழுமையாக உங்களை, ஒப்படைத்தால்,
(பாவி இருந்தாலும்), அபராபச் செயல், நடைபெறுவதனை,
(பகவான்) (பார்த்துப்பான்) இது ஸத்தியம். திரு பாபா.



இதில் நம் மனம் நம் நிழலாக கருதப்படுகிறது. இது எப்படி உண்மை என்றால் உன் உள் இருப்பதோ சைதன்யம் நீ கண்களால் காண்பதோ உன் உடலையும் உன் உடலை சார்ந்த வினை சம்பந்த நாமரூப பொருள் காண்கிறாய். உன் உடலும் உன் வினையின் பொருள்களும் நாமரூபம் தொடரும்.


(20)

பாமா:— இந்த மனம் தானே பாபா! இந்த பாடு படுத்துகிறது? இதை சற்று நம் வசப்படுத்த, ஏதேனும் வேறு வழிமுறை இருக்கிறதா பாபா?

வைத்தியம்:— அம்மா குழந்தே பாமா! இல்லாத மனதிற்கு, ஏன் இருப்பு கொடுக்க வேண்டும்?

பாமா:— என்ன பாபா! இப்படி சொல்லிவிட்டீர்கள்? இல்லாத மனமா? போறுமே வாழ்க்கையை, இருப்பவர்களுக்கு, இந்த மனம் படுத்தும் பாடு சரிதான். ஸன்மார்க்க, பாதையில் செல்பவர்களுக்கு, கொஞ்சம் ஒதுங்கி இருக்கவாமே இந்த மனம்?

வைத்தியம்:— கொழந்தே பாமா! இதை கவனி. சாமான்யர்கள், மனதின் சொரூபமாகவே இருப்பதால், அவர்களுக்கு, இந்த மனதின் இருப்பு தனியே தெரிவதில்லை. ஆனால் நீயோ, மனம் ஒன்று இருப்பதாக, கற்பனை பண்ணிக் கொண்டு, உன் நிழலோடு நீ போராடுவது போல், போராடிக் கொண்டிருக்கிறாய். உன் எண்ணமும், அதை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற போராட்டமே நீங்காத சரியாக இருக்கிறது.




பாமா:— மனமே உங்களுக்கு, தோன்றவில்லையா பாமா? அப்படி அது உங்களிடம் வராதா?

வைத்தியம்:— நீ எதை மனம் எனச் சொல்கிறாய்? தெரிந்தால், இந்த ஏழைக்கு, விளங்கும்படி, சொல்லு பார்ப்போம்?

பாமா:— மன இரும்புக்கு எப்படி, விளக்கம் கொடுக்க முடியும்? மனம் என்றால் எண்ணம் தானே? ஏன்பாபா உங்களிடம் எண்ணமே வராதா?

வைத்தியம்:— எண்ணம் வந்தால் செய்யும். அந்த எண்ணம், என்னை ஒன்றும் செய்யவில்லையே. அது அமைதியாகத்தானே இருக்கிறது?

பாமா:— ஆசையே வருவதில்லையா?

வைத்தியம்:— ஆசை எப்படி வரும்? அது எப்படி இருக்கும்? அது என்ன செய்யும்?

பாமா:— இது என்ன பாபா புதிர் போட்டு, பேசுகிறீர்கள்? ஆசை எப்படி இருக்கும்? என்ன செய்யும் என்றால்? இதற்கு, எப்படி விளக்கம் கொடுப்பது? சரி சரி இதை இப்படி கேட்கிறேன்.



(22)

நான் எனதை விடாமல் உன் உடலுடன் அப்பொருள்களையும் இணைத்து உடைமையும் உரிமையும் இணைத்தால் உன் நிழல் (நாமரூபம்) எப்படி மறைந்து அழிய முடியும்? நாமரூப சம்பந்தம் கொண்ட உன் உடலும்! நாமரூப சம்பந்தம் கொண்ட உன்னுடைய பொருளும்! உருவமும் நிழலும் ஆகும். நான் எனதை விட்டால் உன் நிழல் (மனம்) அழியும் வேறு எதனாலும் நிழலாகிய மனதை அழிக்க முடியாது முடிந்தது.

பாமா:- அன்பின் குடிலில், அன்பர்கள் வருவதும், போவதும், தெரிகிறதா? இல்லையா?

வைத்தியம்:- தெரிகிறது.

பாமா:- அவர்கள்! பொருளும், பணமும், கொடுப்பது உங்களுக்கு, தெரிகிறதா? இல்லையா?


வைத்தியம்:- தெரிகிறது?

பாமா:- யார் யார் வருகிறார்கள்? என்னென்ன கொடுக்கிறார்கள் என்பது, தெரிகிறதா? இல்லையா?

வைத்தியம்:- இங்குதான் ஓர் மாற்றம் தோன்றுகிறது.

பாமா:- அது என்ன மாற்றம்?

வைத்தியம்:- அம்மா பாமா! இதை எம்பாணியில் சொன்னால், உனக்கு புரியாதுதான். ஆகவே இதை, உன் பாணியால், சொல்கிறேன் கேள்? ஆண்! பெண்! குழந்தைகள்! வேஷம் போட்டுக் கொண்டு, ஸ்ரீபகவானே வருகிறான். இங்கொன்று தேவைகளுக்கே மண்ணை வாரி பொருளும், பணமும் கொடுக்கிறான். இங்கு இத்தனை விதமாக இருப்பதும் ஸ்ரீபகவான்



சன்மார்க்க (23)
பாதையில்
செல்பவர்களுக்கு
இந்த மனம் சற்று
ஒதுங்கி இருக்கலாமே
என ஓர் வாசகம் வரு
கிறது. இதை உரையும்
ஜகமார்க்கம் மனதின் வேறு
சன்மார்க்கம் அறிவின் வேறு.

வைத்தியம்

சன்மார்க்கம்/ஜகமார்க்கத்தை (மனதை) கண்டு கொள்ளாமல் ஒதுங்கியபடிதான் சிறந்து தொடரும்.

செல்லும் போது மணவாளன் பொருளே பிரசாதமாக உண்ணும் எடுத்தும் செல்கிறேன். ஆனால் ஓர் உண்மை. பொருள் வரும்! இருக்கும்! போகும்! ஆனால் இருப்பவன் ஸ்ரீபகவான் ஒருவனே. ஆனால் அவன் மாயாவினால் பல நாமரூபமாக தோன்றுகிறது.

பாமா:- (இடைமறிக்கிறாள்) பொறுங்கள் பாபா! பொறுங்கள் பாபா! இதை நாங்கள் எப்படி நம்புவது? எங்கள் கண்களுக்கு, ஆண்! பெண்! குழந்தைகளென, வித விதமாக தோன்றுபவை, உங்கள் கண்ணுக்கு மட்டும், ஸ்ரீபகவானாக தோன்றும் மாயம் என்ன?


வைத்தியம்:- நீ காண்பது மனக் கண்கள் யாம் உணர்வது அறிவுக் கண் ஆகும்.

பாமா:- எங்களுக்கும் அந்த அறிவுக் கண்ணை கொடுக்கலாமே பாபா?

வைத்தியம்:- அறிவுக்கண் என்பது, கொடுப்பதல்ல அம்மா நீயாக எடுப்பதாகும்.

பாமா:- புரியவில்லையே. பாபா?

## கேள்வி பதில்



ஜகமார்க்கத்தை
துறக்குவதே (24)

அல்லா துஷ்டனை கண்
டால் தூர விலகு! என்பர்
துஷ்டனை விலகு என
சொல்லக் கூடாது!
சொல்ல முடியாது!
சொல்ல இயலாது!
காரணம் இது துஷ்டனின்
ராஜ்யம். அவன் ஆட்சி. அவன்
ஆட்சியில் நாம் இருந்து கொண்டு அவனை நீ போ
என விலக்குவது தர்மமில்லை. [illegible]

வைத்தியம்:— உன் கர்மவினையின் மனக் கண்கள் மூடினால், அறிவுக் கண் தானே பிரகாசிக்கும். அதுவே நீ விரும்புவதாகும்.


பாமா:— அந்த மனக் கண்களை, மூடத்தான் மார்க்கம் தெரியவில்லையே பாபா?

வைத்தியம்:— அம்மா பாமா! முன்பே ஆசையை வைத்தே உன் கேள்வி வந்தது. ஆசையால், அவஸ்தைப் படுகிறேன் என்றும். மனம் படுத்தும் பாடு, தாள முடியவில்லையே என்றும். கேள்வி வந்தது. அம்மா இன்று இருப்பு எப்படி எனக் கேட்டு, சொல்வாய் போம்?

பாமா:— தேவையும்! ஆசையும்! தான், மன இருப்பாகும். ஆசை இல்லையேல்! தேவை இல்லை! தேவை இல்லையேல்! ஆசை இல்லை! யென உணர்கிறேன். ஆனால் பாபா! இவ்விரண்டையும் இல்லாமல் செய்யும் மார்க்கம் தான், புரியவே! இவைகளை இல்லாமல், செய்து விட்டால், மனம் நம் வசப்படும். என்பதை உணர முடிகிறது. ஆனால் மார்க்கம் தான் தெரியவே!

வைத்தியம்:— சற்று முன், யாம் சொன்ன அனுபவ வாசகங்களை, உணர்ந்தாலே போதுமே!

பாமா:— அது எப்படி பாபா! சாத்தியமாகுமா?




நாம் தான் ஒதுங்க வேண்டும். நாம் ஒதுங்குவது என்றால் (சர்வார்ப்பணம்) ஒன்றை செய்யும்போது அவன் நமக்கு உதவமாட்டான் என தெரிந்து கொண்டு அவன் உள்ளே ஒதுங்கி விடுவான். ஒன்றை விட்டால் ஒன்றை பற்றியே ஆக வேண்டும். (25)

ஆகவே நாம ரூப குண தோஷம் உள்ளே விடுவோம். கருணையான ஸ்ரீபகவான் உள்ளே நுழைந்துக் கொள்வான். முடிந்தது.

வைத்தியம்:- ஏன் சாத்தியமாகாது பாமா?

கணவன்! குழந்தை! உறவு, சுற்றம், நட்பு, ஆகிய (அநித்யமாயும்)! தொழில், குடும்பம், பணம் ஆகிய (அநித்யமாயும்)! ஸ்ரீபகவானே (வேஷம்) போட்டிருக்கிறான் எனவும், (தேவையறிந்து) (ஹிதமாய்) (ஆசையறிந்து) (மனப்பக்குவ நிமித்தமாக) (கொடுக்கவும்! எடுக்கவும்!) செய்கிறான் என்றும், நம் (மன தடுமாற்றத்தால்), வாங்கியதையும்! கொடுத்ததையும்! (மறந்து விட்டோம்) என்றும், ஸ்ரீபகவான் எது நடத்திறதும், எதைக் கொடுத்ததும், எதை எடுத்ததும் (நம் நன்மைக்கே) என உணர்ந்து பழகிக் கொண்டால், வேற்றுமை தெரியாது மறையும்! பேதம் தெரியாது ஒழியும்! ஆனந்தம் தானே நிலவும்.

பாமா:- ஆமாம் பாபா! நீங்கள் சொல்லும் போது கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. வாழ்க்கையில், நடைபெறும் போது, தவறி விடுகிறதே காரணம் என்ன?



ஆண்! பெண்! ௨௬
குழந்தைகள்!
நாமரூபம் விளையாட்டு
ஆகும். அவ்விளை
யாட்டை எடுத்து
ரசிகையின் மனதை
வைத்து விளையாடுவேன்
என்று ஸ்ரீபகவான் ஆட்
டுகிறான் என்பதே வைத்தியம்.

அந்த ரசிகையின் மனதை நான்! எனது! என
சொந்தம் கொண்டாடி அம்மனமே துக்கிக்கிறது.


வைத்தியம்:- வேஷங்களை ஏன் மாற்றுகிறாய்?
வேஷங்களை காணுமல் வேஷம் போட்டிருப்பவனை
உள் இருப்பவனை உணரலாமே?

பாமா:- உள் இருப்பவனை, காண முடிய வில்லையே பாபா?

வைத்தியம்:- அது எப்படி காண முடியாமல் போகும்.
உன் மகன்! பள்ளிக்கு சென்று உன் மகன்! நடிக்கும் காட்சியை
காண்கிறாய் என வைத்துக் கொள். அங்கு உன் மகன்
ஓர் பெண் வேஷம் போட்டிருக்கிறான், என வைத்துக் கொள்.
குரலும் பெண் வேஷத்திற்கு, ஏற்றபடி மாற்றி யிருக்
கிறான் என, வைத்துக் கொள். அங்கு அக்காட்சியால்,
உன் மகனை காண்பாயா? ஓர் பெண்ணை காண்பாயா?

பாமா:- இது நல்ல உதாரணம் தான் பாபா!
ஒரு பெண்ணை காண்போம்! ஆனால் எம்மகனை உணர்வோம்.

வைத்தியம்:- அப்படியானால், காட்சி வேறுதான்!
உணர்வு வேறுதான்! என உணர முடிகிறதல்லவா?
இதைப் போலத்தான், இவ்வுலக மாகிய நாடக மேடையில்,
நடிக்கும் அனைத்து நாம ரூப, ஜட ஜீவ, தோற்றங்களின்
அனைத்தும். பரந் தோற்றமாகிய வேஷம் வேறுதான்



இங்கு காண்பான் (27)
நாமே என்றும், நாம ரூப வேஷம் வினை வசம் என்றும், நடிப்பு வினைப்படி திட்டமிட்ட காரியம் என்றும். இங்கு உரிமை உடைமை இருந்தால் வினையும் தொடரும்! ஆட்டமும் தொடரும்! பிறவியும் தொடரும் என்பதை உணர்ந்தால் போதும். நான் என்றதை விட்டு அது சர்வார்ப்பணம் ஆனால் வினையும் இல்லை. இயக்கமும் மனமும் இல்லை. நடத்தும் வினையென்ற ஸ்ரீமத்வாவும் இல்லை. இருப்பது நாமே.


வேஷம் போட்டு நடிப்பவன் வேறுதான் என, உணர முடிகிறதல்லவா? காட்சியை காணலாம். உள் இருப்பவனை காண முடியாது. ஆனால் உள் இருப்பவன் உணர முடியுமல்லவா?

பாமா:- ஆமாம் பாபா! காட்சியின், நாம ரூபம் வேறுதான். அக்காட்சியின் நாம ரூபத்தின் உள் இருப்பவன், வேறு தான் என, உணர்ந்தோம் பாபா. ஆனால் இந்த மிடாட்சியை ஏன், உடனே உணர முடியவில்லை பாபா.

ஸத்தியம்:- நாமரூப காட்சிகள் புறக்கண்களுக்கு மனக்கண்ணுக்கு தெரிகிறது. நாமும் ஓர் ஸ்தூலமாய் இருப்பதால், நம்பி விடுகிறது.

அந்த நாம ரூபத்தின், உள் இருப்பவன் கண்களுக்கு தெரியாமல், மறை பொருளாய் இருப்பதால், மனக்கண் நம்ப மறுக்கிறது. அறிவுக்கண் நம்புகிறது.

பாமா:- இப்படி உள் ஆழ்ந்து, உணர்ந்தாலும், நம்பிக்கை வர மறுக்கிறதே, காரணம் என்ன?




நாமரூப காட்சியில் மனம் மயங்கிறது. உள் இருப்பவனை உணர முடியாது. நாமரூபம் விதியின் வெளிவேஷம் என சத்தியமாக உணர்ந்து விட்டால் அங்கு மனமே அறிவாகிவிடும். அறிவான மனம் ஆகவும். அங்கேயே மனம் திரும்பி கலக்கமில்லாத ஒருமையான ஆனந்தம் நிறையும்.

(24)

வைத்தியம்:- பழக்க பேச்சு வழக்கும் செய்கை புறச்செயலாகவும் புறத் தோற்றமாகவும் அமைந்து விட்டதால், மனம் வெளியே பார்க்கிறது. அறிவு மௌனமாய் இருக்கிறது.

பாமா:- உள் இருப்பவனை, உணர்வு பூர்வமாக, எந்த வழியும், உணர வேண்டுமானால், நாம் என்ன செய்ய வேண்டும் பாபா?

வைத்தியம்:- அன்பான பாமா! அந்த நாமரூப தோற்றங்களிலும், தோன்றும் காட்சி எல்லாம் விதியின் அசைவுகள் என்றும். அவை அவைகளின் விதியின்படி ஆடிக்களிக்கின்றன என்றும், அவைகளின் விதியின்படி, ஆட்டப்பட்டு கழிகின்றன என்றும். அந்த ஆட்டத்தில், கவனம் இல்லாமல் உள்ளே இருப்பவனிடம் மட்டுமே, ஸ்ரீ பகவானிடம் நம் கவனம் முழுமையாக இருந்தால், ஆட்டம் மறைந்து வரும். காட்சிக்கு எளியான் காண் என்று நீ அறிவாய், அவனை உணர்வாய்! காணுவாய்! மெய்யாகவாம்.




காட்சிக்கு எளியான்

29

என்றால்; நாம ரூப வெளிக் காட்சியை கண்டு மயங் காமல் கற்பனையை ஒழித்து அதன் உள் இருந்து இயக்கு பவனும், இயங்குபவனும் ஒருவனாகிய ஸ்ரீ பகவானே என்ற உணர்வில் ஒன்றா கலந்து விட்டால் அவன் காட்சிக்கு எளியவனே.

பாமா:— அன்பான பாபாவே! இதை இன்னமும் சற்று விளக்கமாக, உதாரணத்துடன் சொல்லுங்கள் பார்ப்போம்? ஏன் என்றால், இந்த மயக்கம் எங்கள் அனைவரிடமும், இருக்கிறது. எங்களை பாடம் கேட்டாலும். மடல்களை படித்தாலும். வேதாளம் பழைய படி முருங்கை மரத்தில் ஏறிய கதையாக இருக்கிறது. தயவு செய்து விளக்கம் கொடுக்கவும்.


வைத்தியம்:— என் அருமை செல்வமே பாமா! உன் குழந்தையானவன், பள்ளி செல்லும் போது, அம்மா! நான் ஓர் பெண் வேஷமிட்டு நடிக்கிறேன். நீயும் வந்து காணலாம் என சொல்லிவிட்டு அவன் பள்ளி சென்று விடுகிறான்; என வைத்துக் கொள். நீ என்ன வேஷம், போட்டுப் போகிறான் என, முன்பே தெரிந்து கொண்டாய். நீ பள்ளி சென்று, அந்த நாடகத்தை ரசிக்கிறாய். அங்கு உன் மகன் நடிக்கும் போது, அங்கு மேடையில் உன் மகனை நீ காணமாட்டாய். காண முடியாது. ஓர் பெண்ணைத்தான், நீ காண்பாய். அந்த நாடக ரங்கையில் உன் மகனாகிய அந்த பெண், அவர் கணவனிடம்



கண்டாலும் காணேன் காண்
என்றால் நாமரூப
வெளிக் காட்சி (30)
யாவையே மயங்கி
அதன் குணதோஷத்
தைக் ஆட்பட்டு விட்டால்
அக் குணதோஷமே உன்
கண்களை மறைத்து விடுவ
தால் நீ அவளை காணவில்லை
என்றும் உணர்க. நாமரூப
பொம்மை! படங்கள் பிரகாசிக்கிற! கண்டாலும்
நீ அவளை காணவில்லை. தோஷங்களையே காண்கிறாய்.

கொஞ்சி மகிழவும் செய்வாள் கணவனிடம் அடி
வாங்கவும் செய்வாள் அவருடைய குழந்தைகளிடம், அரவணைத்தும்
அதட்டியும் அடித்தும் வேலை வாங்குவாள். அங்கே
அந்த காட்சிகளையும், ரசனையோடு ரசிக்கும் நீ
அக்காட்சிகளில், ஒன்றி விடுவதால், அங்கே அந்த
மேடையில், அப்பெண் உன் மகள் என்பதை முழுமையா
மறந்து விடுவாயல்லவா? அதன் காரணம் என்னெ?

பாமா:— சற்று உள் ஆழ்ந்து சிந்தித்தால் ஆமாம் பாபா!
அங்கு என் மகளை காண மாட்டோம். ஒரு
குடும்ப பெண்ணைத்தான் காண்போம். ரசிப்போம்.
அங்கு எம் எண்ணம், எப்படி இருக்கும் என்றால்?
(A) இந்த பெண் இப்படி செய்கிறாளே! இப்படி பேசுகிறாளே!
இப்படி செய்யலாமே! இப்படி பேசலாமே! இவள்
இப்படி நடந்தால், குடும்பத்தில் பிரச்சினையே இராதே.
இவ்விடங்களை ரசிக்கும் போது, இவள் செய்வது
சரிதான். நல்ல பொறுப்பாக நடக்கிறாள்.
நாமும் இவ்வாறு நடந்தால், நலமாக இருக்கும்.
அவள் குழந்தைகளை நன்கு பராமரிக்கிறாள் என்று
அனைத்து விதமாக திறமையுடன் ரசிப்போம்.




பஞ்ச மஹா பாப பாதகச் செயல் விதி! மன (31) சம்பந்தமாகும். இந்த வினையும்! மனதையும்! வைத்தே விதி நடத்துகிறது என உணர வேண்டும். இந்த வினையும்! மனமும்! எப்படி பின்னால் இருக்கிறது என்றால்? பூர்வ கர்மாவை விட இக் கர்மாவில் இறை உணர்வு இல்லாத நாலும் தொடர்பு

(B) அப்பெண்ணுக்கு, (நம் மகனுக்கு) உரிய கணவனை பார்த்து, இவன் நல்ல திறமையானவனே! ஆனால் நம் மனைவிக்கு தெரியாமல், குடிகாரனாக இருக்கிறானே? நம் மனைவி மேலும்! பிள்ளைகள் மேலும்! ரொம்ப பிரியமாக இருக்கிறானே! நல்லா சிக்கனமாக, குடும்பம் நடத்துகிறான் என்றும், அவனின் நல்ல நிலைகளிலும்! வேற்றியும்! தோற்றியும்! கர்மவினை செய்து கொண்டே அந்த கதா நாடக பாத்திரங்களுடன் ஒன்றி, விலகாமல் நாம், நாடகம் காண்கிறோம் என்ற, எண்ணம் இல்லாமல், அவர்களுள் ஒருவனாகவே ஆகி விடுவோம். இப்போது புரிகிறதா பாபா. இவ்வுலகமும்! நாமும்! எப்படி பின்னிப் பிணைகிறோம் என உணர முடிகிறது பாபா. அதனால் தான் நாங்கள், அடிக்கொருமுறை, சொல்லும் வாசகமாவது:— காண்பவனாக இரு என்றும், சாட்சியாய் நான்! எனது! என மயங்கி விடாதே என்பது, எந்த அளவில், உண்மையென விளங்குகிறது பாபா.

# கேள்வி பதில்






பார்க்கும் (பார்வையாலும்)
காதால் கேட்கும் (ஒலி)
(வார்த்தைகளாலும்)
இவ்விரண்டையும்
வைத்தே (தோஷ!)
(காம! மோஹ! வேக!)
(து) (வே) (ஷ)
கற்பனையான் (துடித்து)

(பார்த்தையாலும்) அதுவே செய்கையாக மாறி கர்மாவை பிணைத்துக் கொண்டே தொடரும்

வைத்தியம்:— குழந்தாய் ராமா! நீ உணர்ந்தது அனைத்தும், உணர்வு பூர்வமான, வைத்தியமே ஆகும்.

(நாமரூப வேஷமானது) (புண்ணிய பாவ வினையாகும்.)
" " (திட்டமிட்ட காரியமாகும்.)
" " (மறுக்கவோ/விலக்கவோ/முடியாதது.)
" " (அவரவர் புண்ணிய பாபம் ஆகும்.)
" " (மாயாவும் மனமும் இணைந்து நடத்துவதாகும்.)
" " (நான் எனதை விட்டால் முடிவுறும்.)
" " (" " தொட்டால் தொடர்வதும்.)
" " (பந்தத்தின் ஜீவ போர்வையாகும்.)
" " (கலிதோஷங்களின் விளையாட்டாகும்.)
" " (காட்சி ஆகும். அங்கு காண்பவன் இல்லை.)

பாமா:— இந்த அளவுக்கு, இந்த மனம், ஓட்டகாரணமானது, எது பாபா?




தன்மையாலும்
குருஹத்தியை (33)
தவிர மற்ற நான்கும்
உண்டாகிறது என
ஸ்ரீமஹான்களின்
வாயிலாக அறிகிறேன்.
இந்த குருஹத்தி ஒன்று
மட்டும் சாமான்ய குரு
ஒருவருக்கே பொருந்தும்.
சிஷ்யன் செய்யும் அபராதத்தை
சாமான்ய குரு
உண்மை ஜீரணிக்க முடியாது, ஆகவே அத்தோஷம்
உண்டாகிறது தோடமே.

வைத்தியம்:— கொஞ்சந்தே பாமா! தர்கவனசக்தி
இல்லாததும் ஈர்கவன சக்தி ஆட்படுத்தியதுதான்
என்று உணர்வாயாக.
பாமா:— ஈர்கவன சக்தி அப்படி ஒட்ட, எது
காரணமானது பாபா?
வைத்தியம்:— நாமரூப தோற்றங்கள், இது
இயற்கையின் விளையாட்டு அதாவது, அந்த
புண்ணிய பாப, தொடர் விளையாட்டு என, உண
ராமல், அந்த நாமரூப தோற்றங்கள், நானது
